(எ) அன்னிய நாட்டு மாணவர்கள் எவரும் பயிலவில்லை. மைசூர் மாநிலத்தில் இருந்து மூன்று மாணவர்களும், கேரள மாநிலத்திலிருந்து ஒரு மாணவரும், ஆந்திர மாநிலத்திலிருந்து ஒரு மாணவரும் இக்கல்லூரியில் பயில் கின்றனர்.

Conversion of Pulavar Diploma into a Degree.

* 38 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any representation was received by the Government requesting conversion of the Pulavar Diploma into a Degree; and

(*b*) if so, the action taken thereon by the Government?

புலவர் பட்டயத்தைப் பட்டமாக்குதல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) புலவர் பட்டயத்தைப் பட்டமாக்கும்படி அரசிற்கு கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பல்கலைக் கழகங்கள் தான் இது குறித்து முடிவெடுக்க வேண்டும். இது குறித்து அரசும் பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொண்டு வருகிறது.

(பிற்பகல் 4-30)

திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, புலவர் பட்டயத்தை ஒரு பட்டமாக அங்கீகரிப்பதற்கு ஆங்கிலத்தையும் ஒரு பாடமாக சேர்த்துப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு வருவது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பி.ஏ. வகுப்புக்குரிய ஆங்கிலத்தில் அவர்கள் அறிவு பெறவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். புகுமுக வகுப்பு, பி.ஏ. வகுப்பு ஆங்கிலத்தில் அவர்கள் அறிவு பெற்றுவிடுவார்களேயானால், அவர்களுக்கு பி.ஏ. பட்டம் வழங்கலாம் என்று மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு எடுத்திருக்கின்றது. அதேபோல சென்னைப் பல்கலைக் கழகமும் முடிவெடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கின்றது.

1974 சனவரி 23]

திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பி.ஏ. பட்டம் அல்லது புலவர் பட்டம் தருவது தமிழ் இலக்கியப் படிப்புக்காக. ஆங்கிலத்தில் இலக்கியப் படிப்புக்காக அல்ல. தமிழில் இலக்கியப் படிப்புக்கு பட்டம் தருகிறபோது, ஏற்கெனவே எஸ்.எஸ்.எல்.சி. யில் அடிப்படை ஆங்கிலத்தைப் பயின்று இருப்பவர்களுக்கு மேலும் ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக வைத்து அதைப் படித்தால் தான் தமிழுக்குப் பட்டம் தர முடியும் என்பது, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற அரசினுடைய கொள்கைக்கு ஒத்தது தாஞ என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேண்டு மாஞல் தனிப் பட்டம் கொடுக்க ஏற்பாடு செய்யலாம். இப்போது அந்தப் பட்டம் கொடுப்பது எதற்கு என்று கேட்டால், 10-வது வரையில், எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்திருக்கின்றூர்கள். பிறகு 4 ஆண்டு காலம் புலவர் வகுப்பு படித்துவிட்டிருக்கின்றூர்கள். பி.டி. ஆசியருக்குச் சமமாக முதல் நிலை தமிழாசிரியர் வருகிறபோது, பி.ஏ. படித்துவிட்டு வர வேண்டும் என்கின்ற ஒரு நிலைமை வற்புறுத்தப்படுகிறது. ஆகவே இந்தத் தகுதியைப் பெறுவதற்காகத் தான் இந்தப் பட்டப் பிரச்சினையெல்லாம் வருகின்றது. அது வருகின்றபோதுதான் அவர்களை மறுபடியும் பி.ஏ. வரை யில் படிக்கச் சொல்லும் அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. அவர்களும் மற்ற வர்களைப் போல 14 ஆண்டுகள் பணியில் தொடர்ந்து இருந்துகொண்டிருக் கின்றூர்கள். அவர்கள் ஆங்கில மொழியை மட்டும் அந்த அளவுக்குத் தனி டாக தாங்களே படித்து, தனிப் பரீட்சை எழுதி பாஸ் செய்துவிடுவார்களே யாஞல், அவர்களை பி.ஏ. பட்டம் பெற்றவர்களுக்குச் சரி சமமாக வைத்துக் கொண்டு, தலைமையாசிரியர் அல்லது மேற்பதவியில் அமர்த்தலாம் என்று பல்கலைக் கழகம் சொல்லுகிறது. அந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான் இது வற்புறுத்தப்படுகிறது. புலவர் என்பதையே பட்டமாக ஆக்கலாம் என்று சொன்ஞல், அதைக்கூட ஆக்கிவிடலாம்; ஆஞல் தலைமையாசிரியர் பதவிக்கு வருகிறபோது, பழைய தன்மையிலே கூறப்பட்டிருக்கின்ற விதி முறைகளைத் தான் பின்பற்ற முடியும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் தாய் மொழியில் பட்டம் பெறுவதற்கு இப்படிப்பட்ட நிபந் தனைகள் இல்லை. தமிழ்நாட்டில் மட்டும் தமிழே உயிர் மூச்சாக உள்ள அரசில், இந்தத் தடைகள் இருப்பது நியாயமானதாகத் தோன்றவில்லை. மற்ற மாநிலங்களில் இருப்பதுபோல, தமிழ் ஆசிரியர்களுக்கு இருக்கின்ற தகுதிக்கு, தமிழ் நாடு அரசும் தமிழ் ஆசிரியர்களுக்கு பட்டம் வழங்க வேண்டும் என்பது

அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை. அரசு அதைப்பற்றி பல்கலைக் கழகத்திடம்,—அது விதிகள் தடையாக இருந்தாலும்—அதனுடைய கொள் கையை மாற்றிக்கொள்ளும்படி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பிற மாநிலங்களில் மொழியாசிரியர்களின் நிலைமைகள் எப்படி வைக்கப்பட்டிருக் கின்றன என்று திட்டவட்டமாக, தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில், கூடுமானவரை தமிழாசிரியர்களுக்கு, எந்தெந்த வகையில் சலுகைகள் தர முடியுமோ அவற்றையெல்லாம் தந்துகொண்டு வருகிறோம். மற்ற மாநிலங்களைப் பின்பற்றி பல்கலைக் கழகம் முடிவெடுக்க வேண்டும் என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சொல்லுகின்றார் கள். மற்ற மாநிலங்களில் அப்படி இருக்குமானால், அதைக்கூட எடுத்துக் காட்டி, பல்கலைக் கழகங்களை அதன்படி முடிவெடுக்க, அதற்கு இணங்கும்படி யாகக் கூடச் செய்யலாம் என்ற நிலைமைகள் உண்டு. அதைப்பற்றி பல்கலைக் கழகங்களுக்கு எழுதியிருக்கின்றோம்.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, at present, persons who have to obtain the Bachelor's Degree in English, French, Science, Physics, Chemistry and Mathematics have also to read a language in their Degree course. May I know, Sir, whether by the reform that is suggested, the Government also feel that the language study may be totally omitted, while preparing for the Bachelor's Degree in Colleges?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்ற பாடங்களைப் பொறுத்தவரையில், இத்தகைய மாற்றங்கள் இல்லை. ஆனால் புலவர் பட்டம் படித்திருப்பவர்களுக்கு டிப்ளமோ என்ற அளவுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. பட்டமாக அதை மாற்ற வேண்டுமென்றால், இன்னின்ன தகுதிகளைப் பெற வேண்டுமென்று பல்கலைக் கழகங்கள் வற்புறுத்துகின்றன. அதைப்பற்றித் தான் பல்கலைக் கழகங்கள் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, புலவர் என்ற பட்டயத்தையே பட்டமாக ஆக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அரசே இந்தமாதிரிப் பட்டம் கொடுக்க முடியாதா? பல்கலைக் கழகங்கள்தான் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்கள் தான் பட்டங்களை வழங்குவதற்கு உரிமை பெற்றிருக்கின்றன.

1974 சனவரி 23]

Thiru G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, was it not due to the requests from the Pulavars themselves that English was also made one of the languages to be studied for the Degree course? Was it not because a request was received from those who studied for the Pulavar examinations, as well as those who were well-acquainted with Tamil, that English also be studied in the Degree Course, because they thought that English was an essential ingredient to make their position in life more secure?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, புலவர்களைப் பொறுத்த வரையில், புலவர் பட்டத்தையே டிகிரியாக மாற்றித் தரவேண்டு மென்றுதான் கேட்கிறார்கள். அதற்கு பல்கலைக் கழகம் ஒத்து வரவில்லை. ஒத்து வருவதற்காக, குறைந்த அளவுக்கான நிபந்தனைகள், விதி முறைகள் இவைகளை நிர்ணயித்து வகைப்படுத்த வேண்டுமென்ற நிலையிலேதான் மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆராய்ந்து சில பல முடிவுகளை எடுத்திருக்கிறார்கள்.

திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் புலவர் பட்டம் பெற்றவர்கள் தலைமை ஆசிரியாக வருவது வேறு விஷயம். அவர்கள் தலைமை ஆசிரியாக வருகிறபோது, அதை ஆலோசிக்க வேண்டும். தனி மொழிக் கல்விக்கு, இலக்கியப் படிப்புக்கு பட்டம் தருகிற கருத்து இருக்கின்றதா இல்லையா என்பதிலே இந்த அரசாங்கத்தினுடைய தெளிவான, துணிவான கொள்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசாங் கத்தினுடைய கொள்கை என்பதில்லை. பல்கலைக் கழகங்கள் பட்டங்கள் கொடுப் பதற்கு என்று சில பல விதிமுறைகள் வகுத்து வைத்துக்கொண்டிருக்கின்றன. அந்த விதிமுறைகளில் உள்ள தன்மைகளின்படி இப்போது புலவர் பட்டம் வழங்குகின்றது. அதுபற்றி பல்கலைக் கழகங்கள்தான் முடிவு செய்ய வேண்டிய வைகளாக இருக்கின்றன.

திரு. செ. முத்துசாமி: இது வரையில் பல்கலைக் கழகங்களிலே அப்படி ஒரு கொள்கை இல்லை என்பதைக் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன் னார்கள். பட்டம் வழங்குவதில் ஏற்கெனவே இவர்களுக்குச் சிக்கல் இருக் கின்றது என்று சொன்னார்கள். ஆசிரியர்கள் புரோமோஷன் பெற்றுச் செல்லும் போது அவர்களுக்குச் சங்கடம் ஏற்பட்டு விடுமே என்பதற்காகத்தான் ஆங்கி லத்தை அவர்கள் படிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் பல பேர்

தமிழே தெரியாதவர்கள்கூட இந்த நாட்டிலே வந்து நல்ல பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். பின்னர் ஒரு ஐந்தாண்டு காலத்திலே படித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இன்று தமிழர்கள் ஆள்கின்றார்கள், அரசு தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் தந்திருக் கின்றது. இப்படிப்பட்ட நிலையில் தமிழ் மொழியிலே படித்தவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டு, அந்தப் பட்டத் தகுதியிலேயே அவர் தமிழ் ஆசிரிய ராகச் செல்லும்போது, அவர்கள் இத்தனை ஆண்டுகளிலே, இன்னின்ன மொழி யைப் படித்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு விதியை வகுக்கலாம். இந்த முறையில் அரசு செயல்பட முன்வருமா? தமிழ் படிப்புக்கு பட்டம் அளிப்ப தற்கு அரசினுடைய கொள்கை என்னவென்பதை அமைச்சர் அவர்கள் அறி விப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அங்கத்தினர் திரு. கணபதி அவர்களே இதை எதிர்ப்பார்கள். அவர்களும் தமிழ் ஆசிரியர்களாகத்தான் இருக்கின்றார்கள். பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்தும் ஆட்சேபணைகள் வரு கின்றன. இதற்கு ஒரு முடிவுக்கு வருவதற்கு, பல்கலைக் கழகங்கள் மூலமாக ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த அளவிலேதான் இரு சாரார்க்கும் சரிசம மாக இருக்க, எடுகேசனல் குவாலிபிகேஷன் என்பதிலே, கல்வித் தகுதிகளிலே இருக்கின்ற சில குறைபாடுகளை மாற்றியமைத்து, அவர்களை எளிதாகப் பட்ட தாரிகளாக ஆக்கலாம். இதற்கு விதிமுறைகள் வகுக்க இணங்கும்படியாக பல்கலைக் கழகங்களைக் கேட்டிருக்கின்றோம். அவர்கள் வகுக்கும் விதிமுறை களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்போது நாம் இருக்கின்ற நடைமுறை விதிகளைத்தான் பின்பற்றவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களே அந்த செனெட்டில் அங்கம் வகிக்கின்றார்கள். அவர்களே வற்புறுத்திக் கொண்டுவருவார்களானால்கூட, அதை ஏற்றுக்கொள்ள நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவர் அவர்களே, அந்த செனெட்டிலே இருப்பவர்களுக்கு ஒரு ஊக்கம் அளிப்பதற்கு அரசினுடைய கொள்கை தெளி வாகத் தெரிய வேண்டும் என்றுதான் இதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிரோன்மணி படிப்பு, சமஸ்கிருத படிப்பை, எம்.ஏ. படிப்புத் தகுதிக்கு ஈடாகக் கருத வேண்டும் என்று பல்கலைக்கழகத்திற்கு அறிவித்திருப்பது போல, நம்முடைய

1974 சனவரி 23]

அரசு தமிழ்ப் புலவர் தகுதியைப் பட்டப்படிப்பாக அறிவிக்க முன் வருவதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தகுதியைப் பொறுத்தவரையில், முதல் நிலை தமிழாசிரியர்கள், பி.ஏ., பி.டி. படித்த ஆசிரியர்களுக்குச் சரி சமமான தகுதி படைத்தவர்களாகத்தான் இருக்கின்ருர்கள். இன்றைக்கு தலைமையாசிரியராக வருவதற்கு என்று சில குவாலிபிகேசன்ஸ் வகுத்திருக்கின்ருர்கள். அந்தத் தலைமையாசிரியர் பதவிக்குத் தகுதி பெற வேண்டுமென்ருல், இன்னின்ன கல்வித் தகுதிகள் பெற வேண்டும் என்று பல்கலைக் கழகமும் வற்புறுத்துகின்றது. இதுதான் இதில் இருக்கின்ற சங்கடம்.

Rates of Pension.

* 39. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any disparity in the rates of pensions of the retired teachers before and after 2nd October 1970; and

(*b*) if so, whether the Government will issue orders to rectify the anomalies?

ஓய்வூதிய விகிதங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 2—10—1970-க்கு முன்னும், பின்னும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் ஓய்வூதிய விகிதங்களில் வித்தியாசம் ஏதும் இருந்து வருகிறதா ?

(இ) ஆமெனில், அதை நீக்க அரசு உத்தரவிடுமா

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு 1—6—1970 க்கு முன்பு 30/120 என்ற விகிதத்திலும் அதற்குப் பிறகு ஓய்வு பெற்றவர்களுக்கு 30/80 என்ற விகிதத்திலும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(இ) இது கொள்கை ரீதியாக இருப்பதால் இந்த வேறுபாட்டை நீக்க வேண்டிய அவசியமில்லை.